THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விவரம் எங்களிடத்தில் இல்லை. இங்கு அசெம்பளி அங்கத்தினர் என்ற ரீதியில் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். 'எங்களுக்கு அதிகாரம் அளிப்பதில்லை' என்று கார்பரேஷன் அங்கத்தினர் என்று நினைத்துக்கொண்டு இங்கு பேசுவது தவறு.

MR. SPEAKER : She has a dual role. (Laughter.)

Irrigation

* 414 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any petition recently from the villagers of No. 105, Thillaivilagam vattam regarding the provision of irrigation facilities for Musaveli in Thiruthuraipundi taluk; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Two petitions, one from Sri Swamiappa Konar and others of Thillaivilagam village requesting irrigation facilities to 150 acres of dry lands lying on the north of Thillaivilagam channel and another from Sri V. Subramania Thevar and others of Therkkukadu, Thillaivilagam village, requesting irrigation facilities to 500 acres out of an extent of 1,500 acres of alem (swamp) poramboke lands in Thillaivilagam village, were received on 18th December 1957.

(*b*) The representation from Sri Swamiappa Konar and others was referred to the Chief Engineer (Irrigation). He has reported that as the 150 acres of dry lands are high in level when compared with the rear normal sil level of Thillaivilagam channel head sluice, the lands cannot be given supply from the channel. The other petition received from Sri V. Subramania Thevar and others was referred to the Collector of Tanjore. He is taking action to provide irrigation facilities to Musaveli Block in consultation with the Executive Engineer, Vennar Division, Tanjore, after executing certain works at an approximate cost of Rs. 22,000.

SRI A. VEDARATHNAM : இந்த நிலங்களுக்கு இப்பொழுது பாசனம் அளிக்கப்பட்டாகிவிட்டது. அதைச் சட்டபூர்வமாக அங்கீகாரம் செய்து உத்தரவு இடுவார்களா? அப்படியானால் அந்த உத்தரவு எ பொழுது கொடுப்பார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : தண்ணீர் கொடுப்பது என்று ஏற்பட்டு விட்டால், சரியான வகையிலே அதற்கு வேண்டியதைச் செய்து எடுத்து வர வேண்டியதுதான். அவைகளெல்லாம் எப்பொழுது நடக்கும் என்பதை நான் இப்பொழுது சொல்லுவதற்கில்லை.

Bridge over Kamandalanaga nadhi

* 415 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆரணிக்கருகில் கமண்டலநாக நதியின் மேல்பாலம் கட்டுவது என்னவாயிற்று?

22nd September 1958]

(ஆ) இதைக் குறித்து ஆரணி முனிசிபாலிட்டியிலிருந்து மனு ஏதாகிலும் வந்ததா?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The question of selecting a site for the bridge work is under examination. The work will be taken up soon after a decision is reached.

(*b*) Yes. The municipal council has recently requested that bridge work already sanctioned may be constructed at any one of the sites selected.

SRI S. M. ANNAMALAI : சில காங்கிரஸ் கட்சித் தோழர்கள் அந்தப் பாலத்தைக் கட்டக்கூடாது என்று ஆட்சேபணை செய்ததன் காரணமாக, அந்த இடத்தை அமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டார்கள். வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதற்காக தொகை சாங்ஷன் செய்யப்பட்டும், வேலை இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. கூடிய சீக்கிரம் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்குச் சர்க்கார் முயற்சி செய்வார்களா?

SRI A. A. RASHEED : He referred to some Congressmen. Will he give the names of the persons who objected to this?

MR. SPEAKER : Is he objecting to the reference to Congressmen or does he want a list of names of Congressmen?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னால் யாரை வேண்டுமானாலும் மக்கள் நினைத்துக்கொண்டு சந்தேகப்படவேண்டிய நிலைமை ஏற்படும். இங்கு இருக்கக்கூடிய மெம்பர்களும் சந்தேகப்பட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, யார் என்பதை விளக்கவேண்டும்.

MR. SPEAKER : இதிலே காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லவேண்டியதில்லை. பொதுவாக ஜனங்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று சொன்னாலே போதும் என்று தோன்றுகிறது. இதுதான் சண்டைக்கு முதல் கட்டம் போலிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னால் அது யாரையாவது குறிக்கலாம். காங்கிரஸ் கட்சி தோழர்கள் என்று சொல்லியதால், காங்கிரஸ் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய எம்.எல்.ஏக்களைக் குறிக்கும். ஆகவே அந்த வார்த்தைகளை வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஜனங்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய குறைகளை அரசாங்கத்தினிடம் சொல்லி நிவர்த்தி செய்துகொள்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. இந்தக் குறையை ஜனங்கள் மட்டும் சொல்லவில்லை. ஆரணி நகர சபையே சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே செலக்ட் செய்த ஸைட் ரொம்ப தூரத்தில் இருக்கிறது. அங்கே ஐந்து கல்வர்டுகள் கட்ட வேண்டியிருக்கிறது, அநேக கிணறுகளும் ஏழைகளின் நிலங்களும் பாதிக்கப்படுகின்றன. அதையெல்லாம் பார்த்துத்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதனால்தான் நான் சென்று மூன்று இடங்களைப் பார்த்தேன். இன்னும் அரசாங்கம் இதில் ஒரு முடிவுக்கு வரவில்லை. முனிசிபாலிடியார் முன்பு இப்பொழுது போகிற காஸ்வேக்கு பக்கத்தில் கட்டவேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது எங்கு வேண்டுமானாலும் கட்டலாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால் இதையெல்லாம் பரிசீலனை செய்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.